## *63*
## *பாகம் 4 (14:1-15:13):*

# “அவருடைய அடிச்சுவடுகளில்”
## (15:1–13)

*1896ல் சார்லஸ் ஷெல்டன் என்பவர் மதரீதியிலான ஒரு புத்தகத்தை எழுதினார். அது முதல் தரமான இலக்கியமாயிற்று: அவருடைய அடிச்சுவடுகளில் (In His Steps[1]). இந்தப் புத்தகத் தொகுப்பினுடைய தலைப்பு, 1 பேதுரு 2:21லிருந்து எடுக்கப்பட்டது: “இதற்காக நீங்கள் அழைக்கப்பட்டுமிருக்கிறீர்கள்; ஏனெனில், கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு, நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்துவரும்படி உங்களுக்கு மாதிரியைப் பின்வைத்துப் போனார்” (என்னால் வலியுறுத்தப்படுகிறது). அந்தப் புத்தகம், ஒரு சபைக்குழுமத்திலிருந்த உறுப்பினர்கள் யாவரும் எந்த ஒரு முடிவையும் மேற்கொள்வதற்கு முன்னர், “இயேசு இதைச் செய்ய வேண்டியிருந்தால், என்ன செய்திருப்பார்?” என்று கேட்க வேண்டும் என்று உறுதிமேற்கொண்டது பற்றிய கதையைக் கூறுகிறது.[2]*

*நாம் சிரமங்களை எதிர்கொள்ளுகையில், “இயேசு இதைச் செய்ய வேண்டியிருந்தால், என்ன செய்திருப்பார்?” என்று கேட்பதில் மதிப்பு உள்ளது - ஆனால் ஒவ்வொரு சூழ்நிலையிலும் இயேசு என்ன செய்வார் என்பது பற்றி நாம் நிச்சயப்படுத்திக்கொள்ள இயலாது. கலந்துரையாடலின்கீழுள்ள மாம்சம் புசித்தல் பற்றிய கேள்விக்கு, நாம் அறிய முடியும். ரோமர் 15:1-13ல், பவுல் நமக்கு இயேசு என்ன செய்திருப்பார் என்று கூறினார். நமது வேத பாட வசனப்பகுதியில் எவ்வளவு அடிக்கடி இயேசுவைப் பற்றிய குறிப்பு ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பதைக் கவனியுங்கள். ஏறக்குறைய ஒவ்வொரு வசனத்திலும் அவர் குறிப்பிடப்பட்டுள்ளார், மற்றும் அவரது உதாரணத்திற்கு சிறப்புக் கவனம் தரப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக 3 மற்றும் 7ம் வசனங்களைக் கவனியுங்கள்: “கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்”; “கிறிஸ்து நம்மை ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக் கொள்ளுங்கள்.” செயல்விளைவில் பவுல், “இந்த விஷயத்தில், இயேசுவின் அடிச்சுவடுகளில் நடவுங்கள்” என்று கூறினார். இந்தப் பாடத்தினூடே நாம் கடந்து செல்லுகையில், உங்களை நீங்களே, “மற்ற கிறிஸ்தவர்களுடனான எனது உறவுகளில், இயேசுவின் அடிச்சுவடுகளில் நான் நடக்கிறேனா?” என்று கேட்டுக்கொள்ளுங்கள்.*

## *மற்றவர்களுக்குப் பிரியமாயிருத்தல் (15:1-6)*

***ஏனென்றால் மற்றவர்களுக்கு இது தேவைப்படுகிறது (வசனங்கள் 1, 2)***

*15ம் அதிகாரம் “அன்றியும்” என்று தொடங்குகிறது. இது பவுல் 14ம் அதிகாரத்தில் கூறிய கருத்தின் விஷயங்கள் பற்றிய தமது சிந்தனைகளை இந்த*

அதிகாரத்திலும் தொடர்ந்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. அவர், "அன்றியும், பலமுள்ளவர்களாகிய நாம் ... பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்" என்று கூறினார் (வசனம் 1). மாம்சம் உண்ணுதல் ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதே என்பதைப் புரிந்துகொண்டவர்கள் "பலமுள்ளவர்களாக" இருந்தனர், மற்றும் பவுல் அந்தக் குழுவுடன் தம்மை அடையாளப்படுத்திக்கொண்டார்: "பலமுள்ளவர்களாகிய *நாம்.*"

14:1-4ஐப் பற்றிய நமது கலந்துரையாடலில் குறிப்பிட்டபடி, பவுல் "பல மானவர்கள்" மீது மிகவும் பாரமான பொறுப்பை வைத்தார். ஒருவேளை, "பல மானவர்களுக்கு" தங்கள் மனச்சாட்சிகளைக் குற்றப்படுத்தாமல் மாறுவது என்பது "பலவீனமானவர்களை"விட சுலபமாக இருக்கிறது என்பதால் அவர் இவ்வாறு செய்திருக்கலாம். "வேண்டும்" என்ற சொல், "கடன்பட" என்று அர்த்தப் படுகிற *opheilo* என்பதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.[3] இது கடன்பட் டுள்ள ஒரு *கடனைக்* குறிக்கிறது. இவ்வார்த்தையின் வடிவங்களை 1:14 மற்றும் 8:12ல் NASB வேதாகமம், "under obligation" என்று தரவழைத்துள்ளது.[4] பவுல் வரைகுறிப்பிட்ட பொறுப்பானது விருப்பத் தேர்வாக இருக்கவில்லை என்று அவர் வலியுறுத்தினார். "பலமுள்ளவர்கள்" கர்த்தருக்குக் கீழ்ப்படிய விருப்பமா யிருந்தால், அவர் கூறியதை அவர்கள் செய்ய *வேண்டியிருந்தது.*

"பலமுள்ளவர்கள்" எவ்விதத்தில் "பலவீனமானவர்களுக்கு" கடன்பட்டுள் ளனர்? முதலாவது, "பலவீனருடைய பலவீனங்களைத் தாங்கவேண்டும்." சந்தர்ப்பப்பொருளில் "தாங்குதல்" என்பது (இது *bastazo* என்பதிலிருந்து வந்துள்ளது) "சகித்துக்கொள்ளுதல்" அல்ல, ஆனால் "சுமத்தல், ஆதரவாகத் தாங்குதல்" என்ற கருத்தில் "தாங்குதலாக" உள்ளது.[5] (காண்க கலாத்தியர் 6:2.) எனது மனதிற்குள், நான் எனது மருமகன் டேன் என்பவர் எனது சிறிய பேரன் எலியாவின் கைகளைப் பற்றிக்கொண்டு, படிகளில் இறங்கிச் செல்வது எப்படி என்று கற்பித்துக்கொண்டே அந்தப் பையன் விழுந்துவிடாதிருப்பதை நிச்சயப்படுத்திக்கொள்வதை நான் காண்கிறேன். வளர்ந்த பிள்ளைகள் தங்களின் வயதான பெற்றோர்கள் சபைக்கட்டிடத்திற்குள் வருவதற்காக அவர்களுடைய கைகளைத் தாங்கிச் செல்வதையும் நான் காண்கிறேன். அதுவே பலமுள்ளவர்கள் தங்களுக்கு மாத்திரம் பிரியமாய் நடப்பதற்குப் பதில் பலவீனமானவர்களுக்கு செய்யும் உதவியாக உள்ளது (வசனம் 1அ).

தங்களையே "பலமுள்ளவர்கள்" என்று நினைத்துக்கொள்ளும் சிலர், தாங்கள் "பலவீனமானவர்" என்று வகைப்படுத்தியுள்ளவர்களிடத்தில் பொறுமை யற்று நடந்துகொள்கின்றனர். அவர்கள், தங்களைப் பற்றிக்கொள்ளும் "பலவீன மானவர்கள்" தங்களைப் பின்தங்கச் செய்து தங்களின் வேகத்தைக் குறைத்து விடுவதாக நினைக்கின்றனர். உண்மையிலேயே பலமுள்ளவர்கள், பலமற்றவர் களுக்கு உதவுவதற்காகவே தேவன் தங்களுக்கு பலம் கொடுத்தார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அவர்கள் தங்கள் அடிவைப்புகளை, தங்களின் பலவீன மான சகோதரர்களுக்கு பொருத்தமான வகையில் எடுத்து வைப்பார்கள்.

"பலமுள்ளவர்கள்" "பலவீனமானவர்களுக்கு" இன்னொரு கடன் பட்டிருக் கின்றனர். "பலமுள்ளவர்கள்" "தங்களுக்கே பிரியமாய் நடக்க"க் கூடாது என்று பவுல் கூறினார். ஒருவர் தமது சுயத்தைப் பிரியப்படுத்த விரும்புதல் என்பது மனித இனப்பண்புகளில் மிகவும் வல்லமைநிறைந்த ஒன்றாக உள்ளது - அதாவது, ஒருவர் தாம் உண்ணவிரும்புவதை உண்ணுதல், தாம் செல்ல

விரும்பும் இடத்திற்குச் செல்லுதல், தாம் செய்ய விரும்புவதைச் செய்தல் போன்றவை. உலக சிந்தை கொண்டவர்கள் தங்களைப் பிரியப்படுத்தும் எதை வேண்டுமானாலும் செய்வதை இலக்காகக் கொண்டிருக்கலாம், ஆனால் அது "பலமுள்ளவர்கள்" என்று பவுல் பெயரிட்டு அழைப்பவர்களின் குறிக்கோளாக இருக்கக் கூடாது. பலமுள்ளவர்கள் சிலவேளைகளில், பிறரது நன்மைக்காகத் தனிப்பட்ட சந்தோஷங்களைக் கைவிட்டாக வேண்டும். நள்ளிரவு வேளையில் ஒரு குழந்தை அழுகிறது. அந்த அழுகையை அதன் பெற்றோர்கள் புறக்கணித்து விட்டுத் தூங்குவதற்குத் திரும்பிச் சென்றுவிடுகிறார்களா? அவர்கள் நல்ல பெற்றோர்களாக இருந்தால் அவ்வாறு செய்யமாட்டார்கள். அவர்கள் தங்கள் சொந்த சந்தோஷங்களை (இரவில் நன்றாகத் தூங்குவதை) விட்டுவிட்டு, அந்தக் குழந்தையின் தேவைகளைக் கவனிப்பதற்காக விழித்துக்கொள்கின்றனர். பலமுள்ளவர் பலவீனமானவருக்கு இதையே செய்ய வேண்டும்.

இது நாம் நம்மைத் தனிப்பட்ட வகையில் பிரியப்படுத்தும் எதையும் *ஒருக்காலும்* செய்யக்கூடாது என்று அர்த்தப்படுகிறதா? இல்லை. மாறாக, இது நாம் மற்றவர்களின் தேவைகளைப் பற்றிய ஆழ்ந்த சிந்தனை எதுவுமின்றி, *நாம்* விரும்புகின்றதைச் செய்வதையே வலியுறுத்திக்கொண்டிருக்கக்கூடாது என்று அர்த்தப்படுகிறது. இது நாம், "தனிப்பட்ட சந்தோஷத்தை நாடும் என் செயல் மற்றவர்களை எவ்வாறு பாதிக்கும்?" என்று கேட்டுக்கொள்வோம் என்பதாக அர்த்தப்படுகிறது.

இதைப் பவுல் பின்வருமாறு இட்டார்: "நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்" (வசனம் 2). இவ்வசனப்பகுதியில், "பிறன்" என்பது "பலவீனமான" சகோதரனைக் குறிக்கிறது.[6] விரும்பப்படும் விளைவு என்னவாக உள்ளது? "நம்மில் ஒவ்வொருவனும் பிறனுடைய *பக்திவிருத்திக்கேதுவான நன்மையுண்டாகும்படி* அவனுக்குப் பிரியமாய் நடக்கக்கடவன்" (வசனம் 2; என்னால் வலியுறுத்தப்படுகிறது). "நன்மை" (*agathos*) என்பது ஆவிக்குரிய நன்மையின் குறிப்பைக் கொண்டுள்ளது. "பக்திவிருத்தி" என்பது 14:19ல் "பக்திவிருத்தி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையிலிருந்து வந்துள்ளது: *oikodome*. நாம் சுயநலமற்றவர்களாகவும் நமது சககிறிஸ்தவர்களின் நலனைக்குறித்து அக்கறை உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். AB வேதாகமம், ஒரு சகோதரருக்குப் பக்திவிருத்தி ஏற்படுத்துதல் என்ற கருத்தைப் பின்வருமாறு விளக்கப்படுத்துகிறது: "ஆவிக்குரிய வகையில் அவரைப் பலப்படுத்திக் கட்டி எழுப்புதல்." JB வேதாகமம், "பலமுள்ள கிறிஸ்தவர்களாகும்படி அவர்களுக்கு ['பலவீனமானவர்களுக்கு'] நாம் உதவ" வேண்டும் என்று கூறுகிறது.[7]

"மற்றவர்களுக்குப் பிரியமாய் நடந்துகொள்ளுதல்" மற்றும் "மனுஷருக்குப் பிரியமாய் இருத்தல்" ஆகிய இரண்டிற்குமிடையில் ஒரு வேறுபாடு உள்ளது என்பதை நாம் கவனிக்க வேண்டும். பவுல், தாம் மனுஷருக்குப்பிரியமாய் *நடப்பவரல்ல* என்பதை எல்லாரும் புரிந்துகொள்ள வேண்டும் என்று விரும்பினார். கலாத்தியாவிலிருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர், "இப்பொழுது நான் மனுஷரையா, தேவனையா, யாரை நாடிப் போதிக்கிறேன்? மனுஷரையா பிரியப்படுத்தப் பார்க்கிறேன்? நான் இன்னும்மனுஷரைப் பிரியப்படுத்துகிறவனாயிருந்தால் நான் கிறிஸ்துவின் ஊழியக்காரனல்லவே" என்று எழுதினார் (கலாத்தியர் 1:10). அதே வேளையில், அவர் மற்றவர்களுக்குப் பிரியமாயிருக்கவும் பிரயாசப்

*பட்டார். அவர், "நான் என் சுயபிரயோஜனத்தைத் தேடாமல், அநேகருடைய பிரயோஜனத்தைத் தேடி, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு, எவ்விதத் திலும் எல்லாருக்கும் பிரியமாய் நடக்கிறதுபோல ..." என்று எழுதி னார் (1 கொரிந்தியர் 10:33). இவ்விரண்டிற்குமிடையில் உள்ள வேறு பாடு என்ன? "மனிதரைப் பிரியப்படுத்துபவர்" - முகத்துதி செய்தல் மற்றும் தவறுடன் சமரசம் செய்துகொள்ளுதல் ஆகியவை தேவைப்பட்டாலும் கூட - மற்றவர்களின் அங்கீகாரத்தை வெற்றிகொள்ளுதல் என்பதை முதன்மைக் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார். இதற்கு நேர்மாறாக, "மனிதருக்குப் பிரிய மாய் நடப்பதற்கு" சத்தியத்தை சமரசப்படுத்தாத வரையிலும், நாம் நமது தனிப் பட்ட விருப்பங்களை மற்றவர்களின் ஆவிக்குரிய தேவைகளுக்குக் கீழ்ப்படுத்து கிறோம்.*

***ஏனென்றால் கிறிஸ்து இதைச் செய்தார் (வசனங்கள் 3, 4)***

*நாம் ஏன் இவ்வளவு சுயநலமற்றவர்களாக இருக்க வேண்டும்? ஏனென்றால் இயேசு இவ்வாறு இருந்தார்: "கிறிஸ்துவும் தமக்கே பிரியமாய் நடவாமல்" (வசனம் 3அ). கிறிஸ்து தமது பிதாவைப் பிரியப்படுத்துதல் என்பதையே முதன்மை நோக்க மாகக் கொண்டிருந்தார். அவர், "பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால்" என்று கூறினார் (யோவான் 8:29). இருப் பினும், மனிதகுலத்தின் நன்மை மற்றும் பக்திவிருத்தி ஆகியவற்றிற்காக அவர் தமது தனிப்பட்ட வசதி மற்றும் மகிழ்வனுபவம் ஆகியவற்றை விட்டுக்கொடுக்க மனவிருப்பமாயிருந்தது என்பது இத்துடன் நெருக்கமாகப் பிணைக்கப்பட் டிருந்தது (காண்க பிலிப்பியர் 2:6-8).*

*பவுல் அடிக்கடி செய்தது போலவே, இவ்விடத்திலும் கலந்துரையாடலில் ஏற்புடைய பழைய ஏற்பாட்டு வசனப்பகுதி ஒன்றை உட்செருகினார்: "உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தைகள் என்மேல் விழுந்தது என்று எழுதி யிருக்கிறபடியே" (ரோமர் 15:3ஆ). இந்த மேற்கோள் சங்கீதம் 69:9லிருந்து வந்துள்ளது. அந்த சங்கீதத்தில் தாவீது, தாம் கர்த்தரைப் பின்பற்றியபடியால் தம்மீது வந்த நிந்தனைகளை நினைவுக்குக் கொண்டுவந்தார்: "உம்மை* [*தேவனை*] *நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள்* ["insults"; NIV] *என்* [*தாவீதின்*] *மேல் விழுந்தது." ஏவுதல் பெற்ற கிறிஸ்தவ போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள், இந்த சங்கீதத்தில், "தாவீதின் குமாரனாகிய" (மத்தேயு 1:1) கிறிஸ்துவின் முன் நிழலிடுதல் ஒன்றைக் கண்டனர்.*[8] *மேசியா, தேவனுடைய சித்தத்தைச் செய்வதற்கு இந்த பூமிக்கு வந்தபோது அவர் தவறாக நடத்தப்படுவார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கப் பவுல் இவ்வசனப்பகுதியைப் பயன்படுத்தினார்.* MSG *வேதாகமம் இந்தச் சிந்தனையைப் பற்றிக்கொண்டுள்ளது: இயேசு வந்தபோது, அவர் "இடர்ப்பட்டவர்களின் இடர்களைத் தம்மேல் எடுத்துக்கொண்டார்." நீங்களும் நானும் இதையே செய்ய வேண்டும் என்பதே இங்கு மறைவான கருத் தாக உள்ளது. கிறிஸ்து நமது மாதிரியாகவும் நமது தூண்டுதலாகவும் இருக் கிறார்.*[9]

*4ம் வசனத்தில் பவுல் பழைய ஏற்பாட்டைத் தாம் பயன்படுத்தியதைத் தற்காக்கச் சற்றே நின்றார். ரோமருக்கு எழுதிய நிருபம் பற்றிய நமது படிப்பு களில், பவுல் தமது போதனையை வலியுறுத்த, உறுதிப்படுத்த, அல்லது விவரிக்க, பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளைப் பயன்படுத்தியதை நாம்*

அடிக்கடி கண்டிருக்கிறோம். ரோமர் 15:3-12ல் பவுல் சங்கீதம் 69ல் இருந்து மேற்கோள் காண்பித்தது மட்டுமின்றி மற்ற பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளில் நான்கையும் குறிப்பிட்டார். 4ம் வசனம், இதை அவர் செய்ததில் சரியானவராகவே இருந்தார் என்று வலியுறுத்துகிறது: "தேவவசனத்தினால் உண்டாகும் பொறுமையினாலும் ஆறுதலினாலும் நாம் நம்பிக்கையுள்ளவர்களாகும்படி, முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம் நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது."

"முன்பு எழுதியிருக்கிறவைகளெல்லாம்" என்பது, பழைய ஏற்பாடு என்று நாம் அழைக்கிறவற்றை குறிக்கிறது. 7ம் அதிகாரத்தில் பவுல், "நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்துக்கு நாம் மரித்தவர்களாகி, அதனின்று விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்" என்று கூறினார் (வசனம் 6). இருப்பினும், இது கிறிஸ்தவர்களுக்குப் பழைய ஏற்பாடு இனியும் மதிப்புள்ளதாக இருப்பதில்லை என்று அர்த்தப்படுவதில்லை. பவுலைப் பொறுத்தமட்டில், பழைய ஏற்பாடு நாம் கற்றுக்கொள்வதற்கு, "நமக்குப் போதனையாக எழுதியிருக்கிறது." புதிய ஏற்பாட்டைப் புரிந்துகொண்டு அதை மதிப்பதற்கு, நாம் பழைய ஏற்பாட்டை அறிந்திருந்தல் அவசியமாக உள்ளது.[10]

"பொறுமையின்" ("சகிப்புத்தன்மை," NIV) மதிப்பு என்பது பழைய ஏற்பாட்டிலிருந்து நாம் கற்றுக்கொள்ளும் ஒரு பாடமாக உள்ளது. வேதவாக்கியங்கள் "விட்டுக்கொடுத்துவிடாத மக்கள் எவ்வாறு தேவனால் உதவியைப் பெற்றனர்" என்று நமக்குக் கூறுகின்றன (ரோமர் 15:4; JB). உண்மையுள்ளவர்கள் தேவனால் ஆசீர்வதிக்கப்படுதல், மற்றும் "ஊக்கத்தை" பெற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றை நாம் வாசிக்க முடியும். இதன் விளைவாக, நமக்கு என்ன நடந்தாலும், நாம் எதிர்காலத்தைத் தைரியத்துடனும் "நம்பிக்கையுடனும்" கண்ணோக்க முடிகிறது.

**எனவே நாம் ஒன்றுகூடி ஆராதிக்க முடியும் (வசனங்கள் 5, 6)**

5 மற்றும் 6ம் வசனங்களில், பவுல் ஒருமைப்பாட்டிற்கான பின்வரும் ஜெபத்தை வியப்புடன் இடையில் இட்டார்: "நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு, பொறுமையையும் ஆறுதலையும்[11] அளிக்கும் தேவன், கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே, நீங்கள் ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி உங்களுக்கு அநுக்கிரகஞ்செய்வாராக." இந்த ஜெபத்தில், "பொறுமையையும் ஆறுதலையும் அளிக்கும் தேவன்" என்ற குறிப்பு அடங்கியுள்ளது (வசனம் 6அ). நாம் பொறுமையாயிருக்கத் தேவன் நமக்கு உதவிசெய்து பல்வேறு வழிகளில் நமக்கு ஆறுதல் அளிக்கிறார்; ஆனால், சந்தர்ப்பப்பொருளில், பவுல் வேதவசனங்களின் மூலமாகத் தேவன் பொறுமையையும் ஆறுதலையும் கட்டி எழுப்புதலைக் குறிப்பிட்டார்.

பவுல் தமது வாசகர்களை ஆசீர்வதித்திருந்த தேவன் அவர்கள் "ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி" அநுக்கிரகம் செய்ய வேண்டும் என்று ஜெபித்தார் (வசனம் 6ஆ). NIV வேதாகமத்தில், "May ... God give you a spirit of unity among yourselves" என்றுள்ளது. RSV வேதாகமத்தில், "May ... God ... grant you to live in ... harmony[12] with one another." என்றுள்ளது. நாம் இருதயத்திலும் மனதிலும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்.

பவுல், "ஏகசிந்தையுள்ளவர்களாயிருக்கும்படி" என்று கூறியபோது, அவர் உண்மையில் எதை அர்த்தப்படுத்தினார்? அந்தச் சொற்றொடர், ஒரேமாதி

ரியான விஷயங்களை விசுவாசித்து போதித்தலைக் குறிக்க முடியும் (தகுதியான ஒரு பிரயாசம்; காண்க எபேசியர் 4:4-6) - ஆனால் பவுல் இன்னமும் கருத்தின் விஷயங்கள் பற்றிக் கலந்துரையாடிக்கொண்டிருந்தார் என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அத்தியாவசியமற்ற விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் *இருந்தாலும்*, கிறிஸ்தவர்கள், "ஏகசிந்தையுள்ளவர்களாக" இருக்க வேண்டும் என்று இவ்வசனப்பகுதியில் அப்போஸ்தலர் வேண்டிக்கேட்டுக் கொண்டார். இங்கு நாம் கற்றுக்கொள்ள வேண்டிய ஒரு பாடம் உள்ளது: *ஒவ்வொரு* விஷயத்திலும் "ஏகசிந்தையுள்ளவர்களாக" இருக்கும்படி நாம் கருத்து ஒன்றுபட வேண்டியதில்லை. உண்மையில், ஒவ்வொரு விஷயத்திலும் கருத்து ஒருமைப்பட வேண்டும் என்றால், ஒருமைப்பாடு என்பது சாத்தியமற்றதாகவே இருக்கும். (கருத்து வேறுபாடுகள் இல்லவே இல்லாத ஒரு குழுவை நான் ஒருக்காலும் கண்டதில்லை.)

நாம் *எவ்வாறு* "ஏகசிந்தையுள்ளவர்களாக" இருக்க முடியும் (வசனம் 6; KJV)? இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதினாலேயே. 6ஆ வசனத்தில் "கிறிஸ்து இயேசுவினுடைய மாதிரியின்படியே" என்ற வார்த்தைகள் அடங்கியுள்ளன. இந்தச் சொற்றொடர், "கிறிஸ்து இயேசுவினுடைய [உபதேச] மாதிரியின்படியே" அல்லது "கிறிஸ்து இயேசுவினுடைய [விருப்பத்தின்] மாதிரியின்படியே" (காண்க யோவான் 17:20-23) என்பது உட்படப் பல்வேறு அர்த்தங்களைக் கொண்டிருக்க முடியும். "கிறிஸ்து இயேசுவின் [உதாரணத்தின்] மாதிரியின்படியே" என்பதே எனது முன்னுரிமைத் தேர்வாக உள்ளது. தம்மைப் பிரியப்படுத்திக் கொள்வதை விட பிறருக்குப் பிரியமாயிருத்தல் பற்றி அதிகம் அக்கறை செலுத்தியிருந்த இயேசுவின் உதாரணத்தைப் பின்பற்றுதல் என்பதுதான் நாம் யாவரும் "ஏகசிந்தையுள்ளவர்களாக இருப்பதற்கான" வழியாக உள்ளது.

"ஏகசிந்தையுள்ளவர்களாக இருத்தல்" என்பது *ஏன்* முக்கியமானதாக உள்ளது? பின்வருவதை ஜெபத்துடன் ஆழ்ந்து சிந்தியுங்கள்: "நீங்கள் ஒருமனப்பட்டு நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனை ஒரே வாயினால் மகிமைப்படுத்தும்படிக்கு" (ரோமர் 15:5). NEB வேதாகமத்தில், "so that with one mind and one voice you may praise the God and Father of our Lord Jesus Christ" என்றுள்ளது. நாம் ஆராதிக்க வேண்டியபடி ஆராதிப்பதற்கு, ஏகசிந்தையுள்ளவர்களாக இருத்தல் அத்தியாவசியமானதாக உள்ளது. ஆராதிப்பவர்களின் இருதயங்களில் பகைமைப்போக்கு இருத்தல் என்பதைப் போல் வேறு எதுவும் ஆராதனையை அழிப்பதில்லை.

தேவனை "ஒரே வாயினால் [குரலினால்]" மகிமைப்படுத்துதல் பற்றி நான் வாசித்தபோது, எனது மனமானது, "ஒருமனப்பட்டு" என்ற சொற்றொடருடன் பிணைபட்டது (வசனம் 5; RSV). நான் உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது, ஆண்களின் நால்வர் பாடகர் குழுவில் மத்திய ஸ்தாயில் பாடினேன். எங்களது குரல்கள் ஒன்றுகலந்தபோதும் நாங்கள் ஒத்திசைவாகப் பாடிய போதும், கூட்டத்தினர் எங்களது நேசித்தனர். துரதிர்ஷ்டவசமாக, அந்த ஆண்டின் இறுதியில் மாகாண அளவில் நடைபெற்ற போட்டியில், எங்களில் ஒருவர் சுதியை விட்டுவிட்டுப் பாடினார். (அது நானா? எனக்குத் தெரியவில்லை.) ஒத்திசைவிற்குப் பதிலாக இசையில் முரண்பாடு இருந்தது, எங்களது பாடல் நிகழ்வானது காதிற்கு இதமாக இருப்பதற்குப்பதிலாக காதைத் துளைப்பதாக, நரம்புகளை அதிரச் செய்வதாக இருந்தது. நாம் நமது

*சககிறிஸ்தவர்களைக் குறித்து, நமது இருதயங்களில் விரோத உணர்வுடன், தேவனை ஆராதிக்க வரும்போது, ஆவிக்குள் நமது ஒத்திசைவின்மையானது பாடுதலில் காதுக்கு ஒத்திசைவின்மை இருப்பதைப் போன்று தேவனுக்குக் குற்றமாகப்படுகிறது என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.*

*7 முதல் 13 வரையிலான வசனங்களுக்குக் கடந்துசெல்வதற்கு முன்னர், நான் சபைக்குழுமத்திலுள்ள கருத்துவேறுபாடுகள் கையாளப்பட வேண்டியவிதம் குறித்துப் பவுல் எவ்வாறு நினைத்தார் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். இரு கிறிஸ்தவர்கள் பலமாகக் கருத்துவேறுபடும்போது, "புவியியல்ரீதியான தீர்வு" என்று டேல் ஹார்ட்மேன் என்பவர் அழைக்கும் தீர்வினால் மாத்திரமே விஷயமானது சரிசெய்யப்பட முடியும் என்று இன்றைய நாட்களில் சிலர் நினைக்கின்றனர்: "எனது விருப்பப்படி காரியம் நடக்கவில்லை என்றால், நான் பிரிந்து சென்றுவிடுவேன்."[13] ரோமாபுரியில் யாரேனும் ஒருவர், "மாம்சம் உண்ணுதல் மற்றும் நாட்களை விசேஷித்துக் கொள்ளுதல் ஆகியவற்றில் நாம் கருத்தொருமைப்படாதபடியால், குழுமக்களைப் பிரித்துவிடுவதே இப்பிரச்சனை தீர நல்வழியாகும். நாம் ஏன் மாம்சம் உண்ணும் சபைக்குழுமம் மற்றும் மாம்சம் உண்ணாத சபைக்குழுமம் என்று இரு குழுமங்களைக் கொண்டிருக்கக்கூடாது? அத்துடன் நாம் நாட்களை விசேஷித்துக்கொள்ளும் சபைக்குழுமம் மற்றும் நாட்களை விசேஷித்துக் கொள்ளாத சபைக்குழுமம் என்றும்கூடக் குழுக்களைக் கொண்டிருக்க முடியும்" என்று முன்மொழிவதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. அது பவுலின் தீர்வாக* இருக்கவில்லை. *கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், நம்மை நாமே பிரியப்படுத்திக் கொள்வதற்குப் பதிலாக மற்றவர்களுக்குப் "பிரியமாய் இருக்க" கற்றுக்கொள்ளுதல் என்பதே கிறிஸ்தவர்களுக்கான அவரது தீர்வாக இருந்தது. அப்போது நாம், "*ஒரே *வாயினாலே [குரலினாலே] தேவனை மகிமைப்படுத்த முடியும்!" (என்னால் வலியுறுத்தப்படுகிறது.)*

## *மற்றவர்களை ஏற்றுக்கொள்ளுங்கள் (15:7-13)*

***ஏனென்றால் இதுவே கிறிஸ்து செய்ததாக உள்ளது (வசனம் 7)***

*இந்தக் கலந்துரையாடலின் தொடக்கத்தில், பவுல் "பலமுள்ளவர்கள், விசுவாசத்தில் பலவீனமாயிருப்பவர்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டும்" என்று கூறினார் (14:1). இவ்விடத்தில், அவர்* எல்லாக் *கிறிஸ்தவர்களும் "ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளும்படி" வேண்டிக்கேட்டார் (15:7ஆ). முன்பே குறிப்பிட்டபடி, "ஏற்றுக்கொள்ளுதல்" என்பது "முழு இருதயப்பூர்வமான ஏற்றுக்கொள்ளுதல்"[14] - லூக்கா 15ல் தகப்பன் தன் மகனுக்குக் கொடுத்தது போன்ற வகையிலான வரவேற்பு - என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. (ஊதாரி மகன் தனது தகப்பனைச் சந்திப்பதற்குப் பதிலாக, சாலை ஓரத்தில் தனது அண்ணனைச் சந்தித்திருந்தால் என்னவாகியிருக்கும்? அவன் அனேகமாக திரும்பிச் தனது பன்றிக் கொட்டிலுக்குச் செல்ல வேண்டியதாகியிருக்கும். நீங்களும் நானும் எப்போதாவது, சக கிறிஸ்தவர்களுக்கு "மூத்த சகோதரனுடைய வரவேற்புகளை" நீட்டித்ததில் குற்றப்பட்டு இருக்கிறோமா?)*

*மற்றவர்களை ஏற்றுக்கொள்ளக் கற்றுக்கொள்ளுதல் என்பது இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதற்கு அத்தியாவசியமான பாகமாக உள்ளது. பவுல்,*

"கிறிஸ்து நம்மை[15] ஏற்றுக்கொண்டதுபோல, நீங்களும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறினார் (வசனம் 7ஆ, இ). இயேசு நம்மை நமது தவறுகள் மற்றும் குறைபாடுகள் ஆகியவற்றுடன் ஏற்றுக்கொண்டார். "தேவனுக்கு மகிமையுண்டா[வதற்கா]க" (வசனம் 7அ), நமது தேவன் எவ்வளவு இரக்கம் நிறைந்தவர் என்று செயல் விளக்கப்படுத்துவதற்காக (காண்க வசனம் 9) அவர் இதைச் செய்தார். அதுபோலவே, நீங்களும் நானும் ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ளும்போது, இது தேவனுக்கு மகிமையாக உள்ளது. மறைவாக உணர்த்தப்படும் முடிவை ஆழ்ந்து சிந்தியுங்கள்: நாம் ஒருவர் மற்றவரை ஏற்றுக் *கொள்ளவில்லை* என்றால், தேவன் மகிமைப்*படுவதில்லை.*

**ஏனென்றால் இது தேவனுடைய சித்தமாக உள்ளது (வசனங்கள் 8-11)**

பவுல், "கிறிஸ்து *நம்மை* ஏற்றுக்கொண்டதுபோல" என்று கூறியபோது, அவர் யூதர்கள் மற்றும் புறஜாதியார் ஆகிய இருசாராரும் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றிப் பேசினார்: "... இயேசுகிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர் [*யூதர்*]களுக்கு ஊழியக் காரரானாரென்றும் ... *புறஜாதியாரும்* இரக்கம்பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்துகிறார்களென்றும் சொல்லுகிறேன்" (வசனம் 8, 9அ; என்னால் வலியுறுத்தப்படுகிறது). ஒருவர் மற்றவரை ஏற்றுக்கொள்ள வேண்டியது பற்றித் தொடர்ந்த பவுலின் உரையாடலில், அவர் அதற்குப் பின்பு "பலமுள்ள" மற்றும் "பலவீனமான" என்று இனியும் குறிப்பிடவில்லை; அவர் அதற்குப் பதிலாக யூதர்கள் மற்றும் புறஜாதியார் என்று பேசினார். ஒரு குறிப்பிட்ட பிரச்சனையைப் பொறுத்தமட்டில், எந்தக் குழு "பலமுள்ளதாக" மற்றும் எந்தக் குழு "பலவீன மானதாக" இருந்தது என்பதைப் பொருட்படுத்தாமல், அவர்கள் ஒருவர் மற்றவை ஏற்றுக்கொள்ள கற்க வேண்டும் என்று அவர் விரும்பினார். இதுவே அவர்கள் செய்யும்படியான தேவனுடைய சித்தமாக உள்ளது என்று அவர் 8 முதல் 11 வரையிலான வசனங்களில் நிலைநாட்டினார்.

முதலில், பவுல் ஏற்றுக்கொள்ளப்பட்டது பற்றிப் பேசினார்: "இயேசு கிறிஸ்து விருத்தசேதனமுள்ளவர்களுக்கு ஊழியக்காரரானாரென்றும்" (வசனம் 8). "மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், ... வந்தார்" (மத்தேயு 20:28அ). அவரது பூமிக்குரிய ஊழியம் (பணி) அவர்தம் சக யூதர்கள்மீது கவனம் குவித்திருந்தது (காண்க மத்தேயு 10:5). இந்த ஊழியம் "தேவனுடைய சத்தியத்தினிமித்தம் [*huper*]" (ரோமர் 15:8ஆ) - அதாவது, "தேவனுடைய வாக்குத்தத்தங்கள் உண்மையானவை என்று காண்பிப்பதற்காக" - ஏற்பட்டிருந்தது.[16] "பிதாக்களுக்கு [ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபுக்கு]ப் பண்ணப்பட்ட வாக்குத்தத்தங்களை" நிறைவேற்றுவதன் மூலம் அவற்றை "உறுதி யாக்கும்படிக்கு" இயேசு வந்தார் (வசனம் 8அ).

அடுத்ததாகப் பவுல், புறஜாதியார் ஏற்றுக்கொள்ளப்படுதல் பக்கமாகத் திரும்பி னார். "புறஜாதியாரும் இரக்கம்பெற்றதினிமித்தம் தேவனை மகிமைப்படுத்த [வேண்டும்]" என்பது இயேசு பூமிக்கு வந்ததற்கான இன்னொரு நோக்கமாக இருந்தது (வசனம் 9அ). புறஜாதியாருக்கு, யூதர்களைப் போல் எழுதப்பட்ட வாக்குத்தத்தங்கள் தரப்பட்டிருந்ததில்லை; இருந்தபோதிலும், தேவன் தமது கிருபைநிறைந்த ஏற்பாட்டில் அவர்களையும் உள்ளடக்கினார். அவர்கள் "தேவனு டைய இரக்கங்களினிமித்தம் அவரை மகிமைப்படுத்த" பல காரணங்களைக் கொண் டிருந்தனர்.

*பின்பு பவுல், யூதர்களும் புறஜாதிகளும் ஒருநாளில் ஒன்றுகூடி "ஒரேவாயினால் தேவனை மகிமைப்படுத்துவார்கள்" என்பது எப்போதுமே தேவனுடைய விருப்பநோக்கமாக இருந்திருந்தது என்று காண்பிப்பதற்காக, பழைய ஏற்பாட்டிலிருந்து நான்கு வசனப்பகுதிகளை மேற்கோள் காண்பித்தார்.[17] அவர் புறஜாதியாரின் மத்தியில் ஒரு யூதர் தேவனைத் துதித்தலைச் சித்தரிக்கும் சங்கீதம் 18:49[18]ஐ மேற்கோள் காண்பித்தலின்மூலம் தொடங்கினார்: "இதினிமித்தம் நான் புறஜாதிகளுக்குள்ளே உம்மை அறிக்கைபண்ணி, உம்முடைய நாமத்தைச் சொல்லி, சங்கீதம்பாடுவேன்[19] என்று எழுதியிருக்கிறது" (ரோமர் 15:9ஆ).*

*அடுத்ததாக அவர் உபாகமம் 32:43ஐ மேற்கோள் காண்பித்தார், அதில் மோசே புறஜாதிகள் யூதர்களுடன் அகம் மகிழ்ந்ததைச் சித்தரித்தார்: "மேலும், புறஜாதிகளே, அவருடைய ஜனங்களோடேகூடக் களிகூருங்கள் என்கிறார்" (ரோமர் 15:10). அடுத்த வசனப்பகுதி சங்கீதம் 117:1 ஆகும், இது - யூதர்கள் மற்றும் புறஜாதிகள் என்ற - எல்லா மக்களையும் தேவனைத் துதிக்கும்படி வேண்டுகிறது: "மேலும், புறஜாதிகளே, எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்; ஜனங்களே, எல்லாரும் அவரைப் புகழுங்கள்[20] என்றும் சொல்லுகிறார்" (ரோமர் 15:11).*

*கடைசி மேற்கோள் ஏசாயா 11:10 ஆகும், இது புறஜாதியாரை ஆண்டு ஆசீர்வதிக்கப் போகும் ஒரு யூதரைப் பற்றிப் பேசுகிறது: "மேலும், ஈசாயின் வேரும் புறஜாதியாரை ஆளும்படிக்கு எழும்புகிறவருமாகிய ஒருவர் தோன்றுவார்; அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கைவைப்பார்கள் என்று ஏசாயா[21] சொல்லுகிறான்" (ரோமர் 15:12). ஏசாயா மற்றும் பவுல் ஆகியோரால் பயன்படுத்தப்பட்டுள்ளபடி, "ஈசாயின் வேர்" என்ற சொற்றொடர் "ஈசாயினிடத்திலிருந்து எழும்புகிறவரும், ஈசாயை தோற்ற இடமாகக் கொண்டவருமான ஒருவரை" குறிக்கிறது.[22] ஈசாய் என்பவர் தாவீது இராஜாவின் தந்தையாக இருந்தார் (1 சாமுவேல் 16:5-13; மத்தேயு 1:6), இயேசுவின் யூத முன்னோராக இருந்தார் (மத்தேயு 1:1; 21:9). இயேசு விசுவாசிக்கும் புறஜாதிகளுக்கு ஆண்டவராகவும் விசுவாசிக்கும் யூதர்களுக்கு மேசியாவாகவும் இருக்கிறார். கிறிஸ்துவுக்குள்தான் நாம் நம்பிக்கை உடையவர்களாக இருக்கிறோம்.*

*"வேதவசனங்களைப் பவுல், எல்லா விவாதத்திற்கும் முடிவென்ற வகையில் கண்ணோக்கினார்."[23] யூதர்கள் தங்கள் வேதவசனங்களை மூன்று பிரிவுகளாக ஒழுங்குபடுத்தி வைத்திருந்தனர்: நியாயப்பிரமாணம் (தோரா), தீர்க்கதரிசனங்கள் மற்றும் எழுத்துக்கள். பவுலின் மேற்கோள்களில் ஒன்று நியாயப்பிரமாணத்திலிருந்தும் (உபாகமம் 32), ஒன்று தீர்க்கதரிசனங்களிலிருந்தும் (ஏசாயா 11), மற்றும் இரண்டு எழுத்துக்களிலிருந்தும் (சங்கீதம் 18 மற்றும் 117) வந்துள்ளன. ஆதாரமூலங்களின் இந்தப் பல்வகையைப் பயன்படுத்தியதன் மூலம், வேதவாக்கியங்கள்* யாவும் *யூதர்களையும் புறஜாதிகளையும் தேவன் ஏற்றுக்கொண்டதை உறுதிப்படுத்துகின்றன என்று அப்போஸ்தலர் வலியுறுத்தினார். எனவே, கிறிஸ்தவ யூதர்கள் கிறிஸ்தவப் புறஜாதியாரை ஏற்றுக்கொள்ள வேண்டும் மற்றும் கிறிஸ்தவப் புறஜாதியார் கிறிஸ்தவ யூதர்களை ஏற்றுக்கொள்ள வேண்டும்.*

**இப்படியாகத் தேவன் நம்மை ஆசீர்வதிப்பார் (வசனங்கள் 12, 13)**

இந்தக் கலந்துரையாடல் ஒரு ஜெபவிருப்பத்துடன் முடிவடைகிறது. பவுல் ஏசாயாவின் தீர்க்கதரிசனத்திலிருந்து எடுத்த தமது மேற்கோளை "அவரிடத்தில் புறஜாதியார் நம்பிக்கைவைப்பார்கள்" என்ற வார்த்தைகளுடன் முடித்தார் (வசனம் 12). பின்பு, "நம்பிக்கை" என்ற வார்த்தையைத் தேர்ந்து எடுத்துக்கொண்டு, "பரிசுத்தஆவியின் பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் [ஆதாரமுலமாக இருக்கும்] தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக" என்று கூறினார் (வசனம் 13).

14:17ல் பவுல் தமது வாசகர்களிடத்தில், அவர்கள் தங்கள் முன்னுரிமைகளை நேராக வைத்துக்கொள்ளும்படி வேண்டிக்கொண்டிருந்தார். அவர், "தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் *சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது*" என்று கூறியிருந்தார் (என்னால் வலியுறுத்தப்படுகிறது). 14:17ல் உள்ள திறவுகோல் வார்த்தைகளில் பல, 15:13ல் எதிரொலித்தன: "*பரிசுத்தஆவியின்* பலத்தினாலே உங்களுக்கு நம்பிக்கை பெருகும்படிக்கு, நம்பிக்கையின் தேவன் விசுவாசத்தினால் உண்டாகும் எல்லாவித *சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும்* உங்களை நிரப்புவாராக" (என்னால் வலியுறுத்தப்படுகிறது). பவுல் தமது வாசகர்கள் எல்லாக் கருத்து வேறுபாடுகளையும் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்று ஜெபிக்கவில்லை, ஆனால் அவர்கள் அதிகம் முக்கியமான வழிகளில் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அவர் ஜெபித்தார்: சந்தோஷம், சமாதானம் மற்றும் நம்பிக்கை.

மற்றும் அவர், அவர்களுக்கு "நம்பிக்கை *பெருகியிருக்க வேண்டும்*" என்றும் ஜெபித்தார். "பெருகி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*perisseuo* என்ற) வார்த்தையானது "அதிகமான ஒரு அளவு, சாதாரணத்திற்கும் மேலான ஒரு அளவு" என்று அர்த்தப்படுகிற *perisseia* என்ற வார்த்தையினுடைய வினைச்சொல் வடிவமாக உள்ளது.[24] AB வேதாகமத்தில், "May ... you ... abound and be overflowing (bubbling over) with hope" என்றுள்ளது.

மீண்டும் பவுல், தெய்வீகத்துவத்தையும் மனுஷீகத்துவத்தையும் வலியுறுத்தினார். அவர் தமது ஜெபமானது *விசுவாசத்தினால்* ஏற்புடையதாக்கப்பட்ட தேவனுடைய பலத்தின்மூலம் பதில் அளிக்கப்படும் என்று சுட்டிக்காண்பித்தார். அவர் முதலில் விசுவாசத்தைக் குறிப்பிட்டார்: "தேவன் *விசுவாசத்தினால்* உண்டாகும் எல்லாவித சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் உங்களை நிரப்புவாராக." TEV வேதாகமத்தில், "May God ... fill you with all joy and peace *by means of your faith* in him" என்றுள்ளது (என்னால் வலியுறுத்தப்படுகிறது). R. C. பெல் என்பவர், "எல்லாம், கிறிஸ்தவத்தின் மனிதப்பகுதி அமையப்பெற்றுள்ள 'விசுவாசித்தல்' என்ற ஆழமான, திடமான கிரானைட் அடித்தளத்தைச் சார்ந்துள்ளன. 'விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்' [மாற்கு 9:23], ஆனால் அவர் விசுவாசிக்கிறவரையிலும் ஒரு விஷயம்கூட ... சாத்தியமானதாக இருப்பதில்லை" என்று எழுதினார்.[25] பின்பு பவுல் தேவன்மீதான வலியுறுத்தத்துடன் முடித்தார்: "பரிசுத்த ஆவியின் பலத்தினாலே" - அதாவது, கிறிஸ்தவர்களுக்குள் வாசம்செய்து அவர்களைப் பெலப்படுத்துகிற தேவனுடைய ஆவியினாலே (ரோமர் 8:9, 26). தேவனுடைய உதவியுடன் நாம் இந்த வாழ்வில் சந்தோஷத்

தையும் சமாதானத்தையும் பெற்றிருக்கவும் நாளைக்கான நம்பிக்கையைப் பெற்றிருக்கவும் *முடியும்.*

## முடிவுரை

*"இயேசுவின் அடிச்சுவடுகளில் நடத்தல்."*[26] இது எப்போதுமே சுலபமானதாக இருப்பதில்லை. எனது மனதில் நான் ஒரு சிறுபையன், ஆழமான பனித்தரையில், தனது தந்தையைப் பின்பற்றிச் செல்லுகையில், அவரது பாதத் தடங்களில் தனது பாதங்களை வைப்பதற்காகத் தனது கால்களை மிகவும் நீ-ட்-டு-தலைச் சித்தரித்துப் பார்க்கிறேன். இயேசுவின் அடிச்சுவடுகளில் நடக்க நாம் பிரயாசப்பட்டு விரித்தோம் என்றால், நாம் அதற்கு மிகச்சிறந்தவர்களாக இருப்போம். நம்மைச் சுற்றிலுமுள்ள மக்கள் அதற்கு மிகச்சிறந்தவர்களாக இருப்பார்கள், மற்றும் கர்த்தருடைய சபை அதற்கு மிகச்சிறந்ததாக இருக்கும்.

---

குறிப்புகள்

[1]Charles Sheldon, *In His Steps* (N.p., 1896; reprint, Nashville: Broadman Press, 1935). [2]அமெரிக்காவில், ஷெல்டனின் புத்தகம் பற்றிச் சிறிதளவே அறிந்துள்ள அல்லது அறிந்திராத இளம் வயதினர் சமீபத்திய "W-W-J-D" ("இயேசுவாக இருந்தால் என்ன செய்வார்?") ("What Would Jesus Do") என்ற ஆரவாரம் பற்றி அறிந்திருப்பார்கள். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு "W-W-J-D" என்பது, பழக்கமான ஒன்றாக இருந்தால், அதை ஒரு விவரிப்பாகப் பயன்படுத்த முடியும். [3]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 455. [4]KJV வேதாகமத்தில் அந்த வசனங்களில் "debtor" அல்லது "debtors" என்றுள்ளது. [5]Vine, 52. [6]ஒருவேளை பவுல், "பிறன்" என்ற பொதுவான சொற்றொடரை, இவ்விடத்தில் இந்தக் கொள்கை, கலந்துரையாடலின் கீழுள்ள பிரச்சனையைக் காட்டிலும் பரந்த நடைமுறைப் பயன்பாடு கொண்டிருக்க முடியும் என்று சுட்டிக்காண்பிக்கப் பயன்படுத்தியிருக்கலாம். [7]"பலவீனமான" சகோதரருக்கு *எவ்வாறு* "பக்திவிருத்தியூட்டுவது" (கட்டியெழுப்புவது) என்று பவுல் இவ்விடத்தில் விளக்கியுரைக்கவில்லை. அவருடைய புரிந்து கொள்ளுதல் வளருகையில் அவருக்குப் பொறுமையான அன்பான அறிவுறுத்துதல்கள் தருதல் என்பது அத்தியாவசியமான ஒரு விஷயமாக உள்ளது. [8]தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், 69ம் சங்கீதத்தை ஒரு மேசியாத்துவ சங்கீதமாகக் கருதினர். (இது மத்தேயு 27:34; யோவான் 2:17; 15:25; நடபடிகள் 1:20; மற்றும் ரோமர் 11:9, 10 ஆகிய வசனங்களில் மேற்கோள் காண்பிக்கப்பட்டுள்ளது.) [9]Adapted from Charles Hodge, *Romans,* The Crossway Classic Commentaries (Wheaton, Ill.: Crossway Books, 1993), 378. [10]இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியிலுள்ள, "கிறிஸ்தவர்களின் பழைய ஏற்பாட்டுப் பயன்பாடு (ரோமர் 15:4)" என்ற துணைப்பாடத்தைக் காணவும்.

[11]கிரேக்க வசனத்தில் "பொறுமை மற்றும் ஆறுதலின் தேவன்" என்று மாத்திரமே உள்ளது. இது தேவனுடைய பண்புகளை (பொறுமையும் ஆறுதலும் கொண்டுள்ள தேவன்) குறிப்பிடக்கூடும், ஆனால் இவை தேவன் நமக்குத் தருகிற ஆசீர்வாதங்கள் என்ற கருத்து, இந்த சந்தர்ப்பப்பொருளில் நன்கு பொருந்துகிறது. [12]AB மற்றும் MSG வேதாகமங்கள் 5ஆ வசனத்தில் "harmony" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றன. [13]Dale Hartman, sermon on conflict resolution preached at Eastside church of Christ, Midwest City,

Oklahoma, 28 March 2004. [14]Leon Morris, *The Epistle to the Romans* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1988), 502. [15]*பல மொழிபெயர்ப்புகளில் "நம்மை" என்பதற்குப் பதிலாக "உங்களை" என்றுள்ளது. புரூஸ் மெட்சஜர் என்பவர், "*[*humas*, *"உங்களை" என்ற பன்மைச் சொல்லை*] *வாசித்தல் என்பது,* [*hemas*, *"நம்மை" என்ற சொல்லை*] *வாசித்தலைக் காட்டிலும் மேன்மையானதாக மற்றும் அதிகமாகப் பல்வகைப்பட்ட ஆதரவைக் கொண்டுள்ளதாக இருக்கிறது, இது சந்தர்ப்பப்பொருளில் முன்னிலைப் பன்மை இடத்தின் மற்ற நிகழ்ச்சிகளுடன் (வசனங்கள் 5-7)" ஒத்திசைவில் உள்ளது.* (Bruce Metzger, *A Textual Commentary on the Greek New Testament,* 2d ed. [New York: United Bible Societies, 2000]. 473). *"நம்மை" என்பதையோ அல்லது "உங்களை" என்பதையோ, எதைப் பயன்படுத்தினாலும், இவ்வசனப்பகுதியின் அர்த்தம் அடிப்படையில் ஒன்றுபோலவே உள்ளது.* [16]Walter Bauer, *A Greek-English Lexicon of the New Testament and Other Early Christian Literature,* 2d ed., rev. William F. Arndt and F. Wilbur Gingrich (Chicago: University of Chicago Press, 1957), 846. [17]*பெரும்பான்மையான பாகத்திற்கு, வசனப்பகுதிகள் பழைய ஏற்பாட்டின் கிரேக்க மொழிபெயர்ப்பிலிருந்து (செப்துவஜிந்து) வந்துள்ளன. இவ்வசனங்கள் தொடக்கத்தில் எப்படிப் பயன்படுத்தப்பட்டன என்பது பற்றிய கருத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் இவ்வசனங்களின் சந்தர்ப்பப்பொருட்களை வாசிக்க விரும்புவீர்கள்.* [18]*காண்க 2 சாமுவேல் 22:50.* [19]*"பாடுங்கள்" என்பது "துதிகளைப் பாடுதல்" என்று* [*புதிய ஏற்பாட்டில்*] *அர்த்தம் தருகிற* psallo *என்பதிலிருந்து வந்துள்ளது* (*The Analytical Greek Lexicon* [London: Samuel Bagster & Sons, 1971], 441). [20]*பலமொழிபெயர்ப்புகளில், "துதி" என்பதற்குப் பதிலாக "துதி களைப் பாடுங்கள்" அல்லது அது போன்ற சொற்றொடர் உள்ளது* (NIV; JB; NCV).

[21]KJV *வேதாகமத்தில், "ஏசாயா" என்ற எபிரெயப் பெயரின் கிரேக்க வார்த்தையான* "Esaias" *என்பது உள்ளது.* [22]Morris, 506. [23]Jim McGuiggan, *The Book of Romans,* Looking Into The Bible Series (Lubbock, Tex.: Montex Publishing Co., 1982), 419. [24]Vine, 5-6. (Emphasis mine.) [25]R. C. Bell, *Studies in Romans* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1957), 176. [26]*இவ்விடத்தில் நீங்கள், இந்தப் பாடத்திலிருந்து திறவுகோல் சத்தியங்களை மறு கண்ணோட்டமிடுவதற்காகத் தாமதிக்க விரும்பலாம்.*